தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை)

# பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2001 - 2002)

ஒன்பதாவது அறிக்கை

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 31 MAY, 2002)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை)

# பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2001 - 2002)

ஒன்பதாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009.

53/499—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| குழு | உறுப்பினர்கள் .. .. | iii |
| அறிக்கை | .. .. | 1-3 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## *(பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை)*

## பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

*(2001-2002)*

*(2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)*

**தலைவர்**

1. திரு. பி. எம். நரசிம்மன்
   அரசு தலைமை கொறடா

**உறுப்பினர்கள்**

2. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
3. திரு. ப. ஆண்டிவேல்
4. திரு. சொ. கருபபசாமி
5. திரு. மே.ப. காமராஜ்
6. திரு. சி. சண்முகம்
7. திரு. டி. சுதர்சனம்
8. திரு. வி.ஏ. செல்லையா
9. திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்
10. திரு. டி.பி.எம். மைதீன்கான்
11. திரு. ஜெக. வீரபாண்டியன்

**செயலகம்**

திரு. செ.சு. ஜானகிராமன் .. முதன்மைச் செயலாளர்

திரு. வெ. இராசாராமன் .. செயலாளர்

திருமதி பானுமதி ஆனந்தராஜன் .. கூடுதல் செயலாளர்

திரு. ஜி. அனீஸ் அஹமத் .. துணைச் செயலாளர்

திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் .. சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

*(2001-2002)*

## ஒன்பதாவது அறிக்கை

**பெறுநர்**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை-600 009.

### முகவுரை

2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு தனது ஒன்பதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

### குழுவின் கூட்டம்

2. 2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 2002 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 9 ஆம் நாள் சென்னையில் கூடியது.

### தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1997-1998-ஆம் ஆண்டிற்கான 25 ஆவது ஆண்டறிக்கை

3. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1997-1998 ஆம் ஆண்டிற்கான 25 ஆவது ஆண்டறிக்கை 1 ஆண்டு 3 மாதங்கள் 12 நாட்கள் காலதாமதமாக 12-7-2000 அன்று பேரவைக்கு அனுப்பப்பட்டு 7-11-2000 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. ஆண்டறிக்கை காலதாமதமாகப் பேரவைமுன் வைக்கப்பட்டது தொடர்பாக திரு. து. இராஜேந்திரன், இ.ஆப., அரசுச் செயலர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீனளத் துறை, திரு. ரவீந்திர குமார் சர்மா, இ.ஆப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் ஆகியோர் குழுமுன் நேரில்வந்து சாட்சியம் அளித்தனர், அது குறித்த விவரங்கள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. 1997-1998 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தொகுப்பதற்கு 1 ஆண்டு 3 மாதங்கள் 12 நாட்கள் காலதாமதம் ஆக உள்ளதற்குக் காரணம் 1995-1996 ஆம் ஆண்டு கணக்குகள் பொதுக் குழுவில் 11-3-1999 அன்றுதான் வைக்கப்பட்டது என்றும் 1996-97 ஆம் ஆண்டு

கணக்குகள் 30-9-1999 அன்றுதான் பொதுக் குழுவில் வைக்கப்பட்டது என்றும், எனவே ஏற்கெனவே கடந்த இரண்டு ஆண்டுக் கணக்குகளைத் தொகுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் இந்த ஆண்டும் ஒரு ஆண்டு 7 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் மேலும் இந்த காலதாமதத்திற்கு முக்கிய காரணமாக 1996-97-ல் இந்தக் கழகத்தை மூடிவிடப் போகிறார்கள் என்ற நிலை இருந்ததாக ஊழியர்களிடையே மனஉளைச்சல் ஏற்பட்டது என்றும் அதனால் அன்றாடப் பணிகள் சரிவர நடை பெறவில்லை என்றும் துறைச் செயலாளர் தெரிவித்தார். அதற்கு குழு பொதுவாக எந்த நிறுவனத்திலும் கிளை நிறுவனத்திலும் கணக்குகள் அன்றன்றே எழுதி முடிக்கப்பட வேண்டும். மாதமொரு முறை வங்கியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். இந்நிலையில் நிதியாண்டு முடிந்த ஒரு மாதத்திற்குள் ஆண்டு கணக்குகளை தலைமை அலுவலத்தில் தொகுப்பதில் என்ன சிக்கல் என்று துறையிடம் கேட்டபொழுது, தலைமையகம் தவிர்த்து 4 குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் 6 விற்பனை நிலையங்கள் மற்றும் தீவன உற்பத்தி நிலையங்கள் இருக்கின்றன என்றும் இவை வெவ்வேறு இடங்களில் இருப்பதால் அங்கிருந்து கணக்குகள் பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது எனவும் வரும் ஆண்டுகளில் இவை வெகுவாக குறைக்கப்படும் என்றும் துறைச் செயலாளர் தெரிவித்தார்.

5. 1996-97 ஆம் ஆண்டு கணக்குகள் 30-9-1999 அன்று பொதுக் குழுவில் வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள கருத்தின் அடிப்படையில் பார்த்தால்கூட 1997-98 ஆண்டு கணக்குகள் 31-10-1999-க்குள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அவை 20-12-1999 அன்று தொகுக்கப்பட்டுள்ளன என்ற காரணத்தைக் குழு வினவியபோது இந்தக் காலதாமதத்திற்கு அங்கு இருக்கக்கூடிய முதுநிலைக் கணக்கு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்தான் காரணமென்றும் அவர்கள் முன் எச்சரிக்கையாக நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தால் இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்திருக்கலாம் என்றும் வரும் ஆண்டுகளில் இவை வெகுவாக குறைக்கப்பட்டுவிடும் என்றும் துறைச் செயலாளர் உறுதி அளித்தார்.

6. 1997-98 ஆம் ஆண்டு கணக்குகளைத் தொகுப்பதில் தணிக்கை அறிக்கை பெறுவதில், கருத்துருச் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காலதாமதத்தை தவிப்பதற்கு வருங்காலங்களில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று குழு வினவியதற்கு குறித்த காலத்திற்குள் அவைக்கு வைக்கவேண்டியதன் அவசியம் கருதி அடிக்கடி நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும் தேவையெனில் நேரடியாக அந்த விற்பனை நிலையங்களுக்குச் சென்று தகவல்களைச் சேகரித்து குறைக்க நடவடிக்கை

எடுத்துள்ளோம் எனத் துறைச் செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும், வருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் அவைக்கு வைக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க நோடல் ஆபீஸர்ஸ் 2 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களும் தங்களது பணிகளை முறையாக செய்கிறார்களா என்று முறையாகக் கண்காணிக்கப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

7. நிர்வாக இயக்குநரும் துறைச் செயலாளரும் அளித்த விளக்கத்தினையும் உறுதிமொழியையும் ஏற்று, தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1997-98 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினைப் பதிவுசெய்யலாம் எனக் குழு முடிவு செய்தது.

8. 2002 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று உதகமண்டலத்தில் நடைபெற்ற பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

உதகமண்டலம்,
29-1-2002.

**பி.எம். நரசிம்மன்,**
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

ம்,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS